[2nd November 1957

Sri A. GOVINDASWAMY : தஞ்சை மாவட்டத்தில் இன்னும் ஆறு பேருக்குத்தான் இந்தப்படி வழங்கவில்லை என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் நிலைமை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : எல்லா ஜில்லாக்களிலும் அனேகமாக முடிந்துவிட்டது மற்ற ஜில்லாக்களில் முழுவிவரம் வரவில்லை. 100க்கு 95 முடிந்து விட்டது. இதைப்போல சில கேஸ்கள்தான் பாக்கி இருக்கின்றன.

Gobichettipalayam Water-supply Scheme

* 69 *Q.*—Sri K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Gobichettipalayam Municipality recently for treating the Government loan granted for the protected water-supply scheme, as subsidy ; and

(*b*) the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Municipal Council, Gobichettipalayam recently requested that the Water-supply scheme for which a loan alone had been offered might be sanctioned on a half-grant basis.

(*b*) The Government did not find sufficient ground to comply with the request.

Sri K. R. VISWANATHAN : நகராண்மைக் கழகத்தின் நிதி நிலைமையை அரசாங்கம் பரிசீலித்துப் பார்த்துத்தான் இந்த பதில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதுவரையில் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க முடியாத நிலைமையில் இருப்பதால் மான்யமாக பாவிக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? இதற்கு சாதகமான நடவடிக்கையை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : எல்லா பதில்களையும் இங்கு பரிசீலனை செய்துதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டம் சுமார் 14, 15 லட்சம் என்று தெரிகிறது. 10 லட்சம் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் 3½ லட்சம் கொடுக்கப்போகிறோம். அதற்கு முன் விடாப் பிடியாய் சப்சிடி மூலமாக பெறமுடியுமா என்று கேட்டார்கள். அது முடியாது என்று சொல்லப்பட்டது. அடுத்த முனிசிபாலிட்டி தாராபுரத்திலே கடன் மூலமாக கொடுக்கமுடியுமா என்று கேட்கிறார்கள். இப்படி இருக்கும் போது இதை ஒத்துக்கொள்ளமுடியாது.

Sri P. G. KARUTHIRUMAN : இந்த கோபி முனிசிபாலிடி கடன் விஷயமாக அது சாத்தியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதே நேரத்தில் ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமில் 40 ஆயிரம், 50 ஆயிரம் போடும் திட்டமாக முக்கால் பங்கு சப்சிடி கொடுக்க படுகிறது. இந்த கோபியின் நிலைமையைப் பார்க்குபோது அது ஒரு உயர்ந்த டவுன் அல்ல. கிராமம் மாதிரி இருக்கும் நிலைமையை உத்தே சித்து அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை வைத்து கொடுத்திருக்கலாம். அதை மட்டும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்த மாதிரி கிராமாந் திரங்களில் போடப்படும் திட்டத்திற்கும், நகர திட்டத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. இது நகர திட்டம் என்பதனால்தான் வித்தியாசம் இருக்கிறது. ஏதாவது கருணை வைக்கவேண்டும் என்று நிர்பந்தம் வந்தால், திருப்பத் தூருக்குத்தான் என் கருணை போகும், கோபிக்கு போகாது. (சிரிப்பு)